கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கம்
Coventry Tamil Welfare Association

http:// HYPERLINK http://www.tamils.org.uk
www.tamils.org.uk
Email: coventrytamils2002@gmail.com

தலைவர்:- உயர்திரு க.அரியரத்தினம். 07823535094

ஆனிமாத இதழ்
NEWS BULLETIN
JUNE 2020
ஆக்கம்:- ஸ்ரீ.பகீரதன்

நாள்	நிகழ்வு
01/05/2020 முதல்	கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தினால், நடாத்தப்பட்டு வருகின்ற தமிழ்மொழிக் கலைக்கழகத்தின் அனைத்துக் கற்பித்தல் செயற்பாடுகளும், உலகெங்கும் வேகமாகப் பரவி வரும் "கொரோணா" தொற்றிலிருந்து எல்லோரையும் பாதுகாக்கும் பொருட்டு, மறு அறிவித்தல் வரை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள போதும், எல்லா வகுப்புகளுக்குமான தமிழ்ப்பாட செய்முறைகள், நவீன தொழில்நுட்பமுறை மூலம் ஆசிரியர்களும் மாணவர்களும் தத்தமது வீட்டிலிருந்தவாறே அனுப்பப்பட்டும், கற்பிக்கப்பட்டும் வருகின்றன.

தந்தையர் தினம்

மழலைச் செல்வங்கள் "**அப்பா**" என்று உதிர்க்கும் அந்த ஒற்றை வார்த்தையில், வாழ்நாள் முழுவதும் சுமக்கும் தன் குடும்பச் சுமைகளை மறந்து சிரிக்கும் அனைத்து அப்பாக்களுக்கும் இனிய தந்தையர் தின நல் வாழ்த்துக்கள்!

தமிழனாய்த் தலை நிமிர்வோம்

இன்று விக்கிப்பீடியாவில் ஐம்பதாயிரத்துக்கும் அதிகமான தமிழ்க் கட்டுரைகள் குவிந்து கிடக்கின்றன. அவற்றை நாளொன்றுக்கு ஒரு இலட்சத்திற்கும் அதிகமானோர் பார்வையிட்டு வருகின்றனர்.

இவற்றுக்கெல்லாம் காரணமாக விளங்கும் ஒரு தமிழர் யார் என்பதை நீங்கள் அறிந்தால் மிகவும் ஆச்சரியப்படுவீர்கள். அவர் வேறு யாரும் அல்ல. எமது ஈழத்தைச் சேர்ந்தவரும், தற்போது ஐக்கிய அமீரகத்தில் பணிபுரிபவருமான திரு மயூரநாதன் அவர்களே.

2001ல் ஆங்கில விக்கிப்பீடியா ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் 2003 லேயே தமிழ் விக்கிப்பீடியாவின் முக்கியத்துவத்தை உணர்ந்து, உடனேயே தனி ஒருவனாய் தமிழ் விக்கிப்பீடியாவை ஆரம்பித்தது எமக்கு ஒரு வரப்பிரசாதமே.

இன்று மட்டுமல்ல, எமது எதிர்கால சந்ததிக்கும் தமிழரின் தனித்தன்மை, மற்றும் வரலாறுகளை அறிவதற்கு மிகவும் உதவியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. ஆனந்தவிகடன் இவரைக் கௌவரவித்து விருது வழங்கியிருக்கிறது.

கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கமும் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றது.




பாராட்டி வாழ்த்துகின்றோம்

கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தின் தமிழ்க் கல்விக்கழக ஆசிரியர்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கும் கொரோனா முடக்கத்திலும் வீட்டிலிருந்தவாறே கற்பித்தல் செயற்பாடுகளைத் தொடர்ந்து கொண்டிருக்கும் அதேவேளை, கலைநிகழ்வுகள் படைப்புகள் என தமக்கென ஒரு முத்திரையைப் பதித்து வருகிறார்கள் என்பது மிகவும் மகிழ்ச்சிக்குரிய ஒரு விடயமாகும்.

அந்தவகையிலே, பிரித்தானிய இந்தியத் தமிழ் வானொலியின் ஏற்பாட்டில், தமிழ்நாட்டின் பட்டிமன்றத்துக்குப் பெயர்போன பட்டிமன்ற ஜாம்பவான் திரு திண்டுக்கல் லியோனி அவர்கள் தலைமையில், நடைபெற்ற பாட்டுமன்றத்தில், தமிழ்ப்

பாடசாலையின் தலைமை ஆசிரியை திருமதி ரஜனி உதயசேகரன் அவர்கள் பங்கு பற்றி யிருந்தார்.

இணைய திண்ணை அமைப்பின் ஏற்பாட்டில், நகைச்சுவைப் பேச்சாளர் திரு ராஜ்குமார் சாமியோ அவர்கள் தலைமையில் நடைபெற்ற பட்டிமன்றத்தில், தமிழாசிரியை திருமதி அகிலா கணேசன் அவர்கள் பங்கு பற்றியிருந்தார்.

தமிழகத்தின் தமிழ்ப் பட்டறை இலக்கியப் பேரவை நடத்திய "சிங்கப்பெண்ணே" சிறுகதைப் போட்டியில், தமிழாசிரியை திருமதி ஜெயஸ்ரீ சதானந்தன் அவர்கள் முதலிடத்தைப் பெற்றுள்ளார்.

கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தின் தமிழ்மொழிக் கலைக் கழகத்தின், சங்கீத பாட ஆசிரியர் திரு ப.தீனதயாளன் அவர்களின் எழுத்துருவாக்கத்தில், தமிழ்த் திரையுலகின் புகழ்பூத்த பின்னணிப் பாடகர் திரு உன்னிக்கிருஷ்ணன் அவர்களின் புதல்வி பின்னணிப் பாடகி செல்வி உத்தரா உன்னிக்கிருஷ்ணன் அவர்களுடன் இணைந்து குழந்தைகளின் அவலத்தை இறைவனுக்கு எடுத்துச் சொல்லும் இனிய பாடலைப் பாடியிருக்கிறார்.

இவர்கள் அனைவருக்கும் கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கம் வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறது.



உலக அமைதி

உலக அமைதி என்றால், பூமியில் நிலவுகின்ற நாடுகளும், வாழ்கின்ற மக்களும் ஒருவரோடு ஒருவர் இணைந்து, அரசியல் சுதந்திரம், அமைதி, மகிழ்ச்சி ஆகியவற்றில் பங்கேற்று நிற்கும் இலட்சியத்தைக் குறிக்கிறது.

"அமைதியுள்ள இடத்தில் ஈசன் உள்ளான்" என்பது போல உலகத்தில் வன்முறையும், போரும் மறைந்து, மக்கள் மனதார ஒருவரோடு ஒருவர் ஒத்துழைத்து, அமைதியை வளர்க்கின்ற அமைப்புகளை உருவாக்குவதும் உலக அமைதி என்னும் இலட்சியத்தில் அடங்கும்.

"அமைதி உணவளிக்கிறது போர் வீணாக்குகிறது." போரும் வன்முறையும் மனிதனோடு இயற்கையாகவே இணைந்தவை அல்ல. மாறாக, பிறரோடு அமைதியில் வாழ்வதும், ஒத்துழைத்துச் செயற்படுவதும் உயிர்நிலை விலங்குகளிடமும் மனிதரிடமும் இயல்பாக உள்ள பண்புகள் ஆகும்.

"சமாதானத்தை உண்டாக்குபவர்கள் பாக்கியசாலிகள்." பொதுவாக, அனைத்து உலக சமயங்களும் உலக அமைதியை வலியுறுத்திப் பல நல்ல கருத்துக்களை வெளியிட்டுள்ளன. மனிதர் வாழ்கின்ற உலகில், வன்முறைகள் மறைந்து, மனித இனம் ஒரே குடும்பம் என்னும் கருத்து நடைமுறை வாழ்வில் உண்மையாகும் போது, உலக அமைதி ஏற்படும் என்பது சமயங்களின் பொதுவான அணுகுமுறை.

மொத்தத்தில் உலக அமைதியை, எல்லா மக்களும் கடைப்பிடிப்பார்களாயின், மக்கள் சமாதானத்தோடும், சந்தோசத்தோடும் வாழ்வார்கள். பொருளாதார வளம் மேலோங்கிக் காணப்படும். எனவே உலகம் அமைதிபெற எல்லோரும் சேர்ந்து உழைப்போம்.

நன்றி வணக்கம்
அபிசன் முகுந்தன்
தரம் 9

